# Gospel Truth
# காஸ்பல் ட்ருத்

உலகளாவிய திருச்சபைகளின் ஊக்குவிப்பிற்கான வேதாகம விளக்கங்கள்

ISSUE - 10 – FOR PRIVATE CIRCULATION ONLY – இதழ் - 10


## ஒரு விசுவாசியின் ஞானஸ்நானம்

நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக் கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்
– அப்போஸ்தலர் 2 : 38.

1500 ஆம் ஆண்டுகளின் தொடக்க காலத்தில்,வேத ஞானத்தை விளங்கப் பண்ணும்படியான சீர்த்திருத்தங்கள் ஐரோப்பா தேசம் முழுவதிலும் பரப்பப்பட்டு கொண்டிருந்தது.சத்தியத்தை மறுக்கும்விதமாக அன்றைய ஆட்சியில் உள்ள தலைவரின் கருத்துக்கள் இருந்தது.

1517 ஆம் ஆண்டில் மார்டின் லூதர் தலைமையில் புராடெஸ்டன்ட் சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. இச்சீர்திருத்த நடவடிக்கைகளால் அக்கால சபையின் தவறுகள் வெளிக் கொணரப்பட்டது. சீர்த்திருத்த வாதிகளில் பலர் வேதத்தின் சத்தியங்களை, அதன் வெளிச்சத்தை ஆழ்ந்து அறிந்து உணரச் செய்தார்கள்.

கான்ராட் மற்றும் பெலிக்ஸ் மேன்ஸ் என்ற இரண்டு இளைஞர்கள் சுவிர்சர்லாந்தின் சூரிச் நகரின் சீர்த்திருத்தவாதியான உல்ரிச் சுவிங்கிலியிடம் பயிற்சி பெற்றவர்கள். குழந்தை ஞானஸ்நானத்திற்கு எதிராக பல ஆண்டுகள் போராடி கைகோர்த்து நின்றவர்கள். ஒருவர் பாவத்தை விட்டு மனந்திரும்பி மறுபடியும் பிறக்கும் அனுபவத்தை தருவது முழுக்கு ஞானஸ்நானம் என்கிற வேதத்தின் உண்மையான சத்தியத்தை மற்ற இருவரான கிரிபேல் மற்றும் மேன்ஸ் ஆகியோர் புரிந்துகொண்டனர்.ஒரு விசுவாசியின் ஞானஸ்நானம் என்பது அவன் தன் பாவங்களுக்காக தேவனிடத்தில் ஒப்புரவாக வேண்டும் என வாதாடினார்கள். ஏனெனில் அவர்கள் குழந்தை ஞானஸ்நானத்தை ஏற்றுக் கொள்ளவில்லை.



அவர்கள் மனந்திரும்பவோ அல்லது விசுவாசிக்கவோ தெரியாத சிறுகுழந்தையாயிருப்பதினால் அவர்களுக்கு கொடுக்கப்படும் ஞானஸ்நானத்தினால் என்ன பிரயோஜனம்?வேதாகமத்தில் குழந்தை ஞானஸ்நானத்திற்கான எவ்விதமான சான்றோ அல்லது அடையாளமோ கொடுக்கப்படவில்லை.குழந்தை ஞானஸ்நானம் என்பது இரண்டாம் நூற்றாண்டின் கடைசியில் கொண்டுவரப்பட்டு, மூன்றாம் நூற்றாண்டுகளிலே பரவலாக அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதாவது குழந்தைகளுடைய ஆத்துமா நரகத்திற்கு போய்விடாதபடி அவர்களுடைய இந்த ஞானஸ்நானம் பாவத்திலிருந்து விலக்கி அவர்களை பாதுகாக்கும் என்ற தவறான உபதேசமே மேலோங்கியிருந்தது.முழுக்கு ஞானஸ்நானம் பாவத்திலிருந்து விலக்கி அவர்களைப் பாதுகாக்கும் என்ற தவறான உபதேசமே மேலோங்கியிருந்தது. குழந்தைகளின் உள்ளம் கபடற்றது.ஆகவே அவர்கள் மீறுதல்களுக்குட்படுவதில்லை. அவர்கள் மரித்தாலும் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவார்கள்.

குழந்தைகள் வளர்ந்தபின்பும் தாங்கள் குழந்தையாயிருக்கும்போதே ஞானஸ்நானம் பெற்றுவிட்டதால் இளைஞர்களாகி பாவம் செய்தாலும் கூட தான் பரலோகத்திற்குதான் செல்வோம் என தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் சிலர்.அவரவர் தம்தம் பாவத்திற்காக இயேசு கிறிஸ்துவின் விலைமதிப்பற்ற இரத்தத்தாலே கழுவப்பட வேண்டும்.மாறாக குழந்தை ஞானஸ்நானத்தை சார்ந்து இருக்க கூடாது.

குழந்தை ஞானஸ்நானத்திற்கு எதிராகவும், விசுவாசியின் ஞானஸ்நானத்தை ஏற்றுக்கொள்கிறவர்கள் ஞானஸ்நான கோட்பாடுடையவர் (மறுபடியும் ஞானஸ்நானம் பெறுபவர்கள்) எனப்படுவர்.


| தலையங்கம் | வேதாகம வழிகாட்டி | முழுக்கு ஞானஸ்நானம் | கேள்விக்கென்ன பதில் | உங்களுக்குத் தெரியுமா? |
|---|---|---|---|---|
| பக்கம் - 3 | பக்கம் - 4 | பக்கம் - 5 | பக்கம் - 7 | பக்கம் - 8 |

# வேதாகமம்




## நமக்கு போதிப்பது என்ன.....

**தேவனுடைய வார்த்தை**
2தீமோ 3:16-17; 2 பேது 1:20-21;
மத் 24:35

**அன்பு**
மத் 22:37-40; யோவா 14:21-23,
1 யோவா 4:7-11

**மனந்திரும்புதல்:**
அப் 3:19; 17:30; 2 கொரி 7:10

**புதுசிருஷ்டி**
யோவா 3:3-7; 2 கொரி 5:17; ரோம 6:1-4,
எபே 2:1, 5-6

**பாவத்திலிருந்து விடுதலை**
1 யோவா 5:18; மத் 1:21; யோவா 8: 11

**பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல்**
அப் 1:8; 15:8-9; 19:2

**பரிசுத்தம்:**
லூக் 1:73-75; எபி 12:14; 1பேது 1:15-16;
தீத்து 2: 11-12; ரோம 6:22

**தேவனுடைய இராஜ்யம்**
லூக் 17:20-21; ரோம 14:17; யோவா 18:36.

**சபை-** அப் 2:47; எபே 4:4-6;
1கொரி 12:12-13; கொலோ 1:18

**ஒற்றுமை**
யோ 17: 20-23; கலா 3:28;
வெளி 18:2-4;

**நியமங்கள்**
மத் 28:19-20; 26:26-30;
1கொரி 11:23-27; யோவா 13:14-17

**தெய்வீக சுகமளிப்பு**
லூக் 4:18, ஏசா 53:4,5, யாக் 5:13-16

**விவாக முறைமை**
மத் 19:5-6; லூக் 16:18; ரோம 7:2-3;
1கொரி 7:10, 11;

**வெளிப்புற தோற்றம்**
1தீமோ 2:9-10; 1கொரி 11:14-15;
உபா 22:5

**கடைசிகாலம்**
2 பேது 3: 7-12; யோவா 5:28,29;
2 கொரி 5:10; மத் 25:31-46

**தொழுதுகொள்ளுதல்**
யோவா 4: 23,24; எபே 5:19;
2 கொரி 3:17;

**சுவிசேஷம் அறிவித்தல்**
மாற் 16:15;

முதல் ஞானஸ்நானம் குழந்தை ஞானஸ்நானம்.அது வேதத்திற்கு புறம்பானது.இரண்டாவது ஞானஸ்நானம் அல்லது மறுஞானஸ்நானம் விசுவாசியின் ஞானஸ்நானம் எனப்படும்.கத்தோலிக்க சபையினரும், புராடெஸ்டென்ட் சபைகளும் பெரியவர்களின் ஞானஸ்நானத்தை அனுமதிக்கவில்லை.பெலிக்ஸ் மேன்ஸ் ஞானஸ்நானத்தைப் பற்றி பிரசங்கித்ததற்காகப் பலமுறை சிறையிலடைக்கப்பட்டார்.பல இன்னல்களை அனுபவித்துள்ளார்.7 மார்ச் , 1526 ல் சுவிட்சர்லாந்தின் சூரிச் கவுன்சில் கூட்டத்திற்குப் பிறகு முழுக்கு ஞானஸ்நானம் என்பது தண்டனைக்குரிய செயல் என்று ஒரு சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.மென்ஸ் மேலும் ஒருமுறை சிறை செல்ல நேர்ந்தது.

விடுதலைக்குப்பின் மேலும் அவர் ஞானஸ்நானத்தையும், அதைக்குறித்த போதனையையும் தொடர்ந்து செய்தார்.எதிர்ப்பின் மத்தியிலும் மேன்ஸ் தனது போதனையில் வைராக்கியமாயும், உறுதியுடன் சத்தியத்துக்கு கீழ்ப்படிந்தும் இருந்தார்.3 டிசம்பர் , 1526 ல் மீண்டும் சிறை சென்று பின் 5 ஜனவரி , 1927 ல் தணணீரில் மூழ்கடித்து கொல்லப்படும்படி அனுமதிக்கப்பட்டார்.இது 3வது ஞானஸ்நானம்.அவர் லிமட் ஆற்றில் கொண்டு செல்லப்பட்டபோது மிகுந்த சத்தத்தோடு தேவனைத் துதித்தார்.ஜனங்களுக்கு சாட்சியானார்.அவரோடு கூட நடந்து வந்த போதகர் ஒருவர் அவருடைய விசுவாசத்தை கண்டு இன்னும் தேவனை துதிக்கும்படியாக உற்சாகப்படுத்தினார். தூரத்தில் வந்த அவரது தாயும், சகோதரர்களும் அவருடைய நம்பிக்கையிலே நிலைத்திருக்கவும்,தேவனுக்காய் பாடுகளை அனுபவிப்பதின் மேன்மையையும் சொல்லி அவரை ஊக்கப்படுத்தினார்கள்.மேன்ஸ்ன் கைகளும் கால்களும் கட்டப்பட்டு இழுத்துச் செல்லப்பட்டார்.

பின்னர் தண்ணீரில் மூழ்கடிக்கப்பட்டு, தேவனுக்காய் இரத்த சாட்சியாய் மரித்தார்.அவருடைய கடைசி வார்த்தைகள் பிதாவே உமது கைகளில் என் ஆவியை ஒப்புக் கொடுக்கிறேன்.

விசுவாசியின் ஞானஸ்நானம் என்ற சத்தியம் சாதாரணமாக நமக்கு கிடைத்து விடவில்லை.தேவனுக்கென்று தம் வாழ்வை பாதுகாத்து ஒப்புவிக்க எண்ணும் ஒவ்வொருவருக்காகவும் அவர்தம் விலையேறப்பெற்ற மீட்பை அளிப்பதன் சத்தியத்தை ஜனங்கள் அறிந்து உணர்ந்து கர்த்தரைத் துதிப்போம். தேவபிள்ளைகளின் மத்தியிலே ஞானஸ்நானம் கனம் பொருந்தியதாய் இருக்கக்கடவது

## காஸ்பல் ட்ரூத்

*கர்த்தரின் சத்தியத்தை உலகமெங்குமுள்ள சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கித்து, ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்துவதுதான் இந்த இதழின் முக்கிய நோக்கம்.கிறிஸ்துவின் நாட்கள் தொடங்கி அப்போஸ்தலர்கள் காலமட்டும் பிரசங்கித்து வந்த கிறிஸ்துவின் சத்தியத்தையே நாங்களும் இந்த இதழ் வாயிலாக அறிவிக்கிறோம்.*

*கர்த்தரின் வசனமே விசுவாசத்திற்கு ஊன்றுகோலாகும்.அதுவே பாவமன்னிப்பின் நிச்சயத்தையும், இரட்சிப்பையும் நமக்குத் தருகிறது.பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலும், வல்லமையும், அனுதின வாழ்வின் பரிசுத்தமும் நம்மில் வளர வழி வகுக்கிறது.சத்தியத்தின்படி அன்பை போதித்து கர்த்தருக்குள் வழி நடத்த பிரயாசப்படுகிறோம்.*

## இணையதள சேவை

*எங்களுடைய இந்த இதழை ஆன்லைனில் படிக்க* **www.thegospeltruth.org** என்ற *இணையதள முகவரியை பார்க்கவும்.மேலும் உங்களது* **E.mail** *மூலமாகவும் எங்களோடு தொடர்பு கொள்ளலாம்.உங்களது நண்பர்கள் மற்றும் தெரிந்தவர்களுக்கு இந்த இதழை அறிமுகம் செய்யுங்கள். அவர்களது முகவரிகளையும் எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்.*

## தொடர்புக்கு

*தமிழ்மொழியல்லாது வேறு பல மொழிகளிலும் பல நாடுகளில் இந்த இதழை அச்சிட்டு வெளியிடுகிறோம். இந்த பத்திரிகை தொடர்ந்து வெளிவர ஆதரவு தாருங்கள். தேவ சபையின் மூலமாய் நடைபெறும் அனைத்து வகையான ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.உங்களது கருத்துக்களை எதிர்பார்க்கின்றோம்.*

**ஆசிரியர்.டபிள்யூ.எஸ்.வேதா, காஸ்பல் ட்ரூத், 2/227 கோலார்பட்டி**
**பொள்ளாச்சி வட்டம், தென் இந்தியா - 642 107**

# ஆசிரியரின் தலையங்கம்

அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள்.அன்றையத்தினம் ஏறக்குறைய மூவாயிரம்பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள் – அப்போஸ்தலர் 2 : 41

இரண்டு ஆயிரம் வருடங்களுக்கு முன், பெந்தெகொஸ்தே நாளின்போது மூவாயிரம் ஆத்துமாக்கள் ஞானஸ்நானம் பெற்றதைக் குறித்த காரியம் மிகவும் பிரமிக்கத்தக்கது.கற்பனை செய்து பாருங்கள்.மிகுந்த எதிர்பார்ப்போடு மிக நீண்ட வரிசையில் தங்களுக்கான தருணத்தை நோக்கி காத்திருந்து ஞானஸ்நானம் பெற்ற அந்த ஜனங்களை எண்ணும்போது மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. இந்த சம்பவம் அங்கே ஆரவாரமும்,மகிழ்ச்சியின் சப்தங்களும், களிப்புள்ள முகங்களையும் காண முடிகிறது. துதிக்கும் கரவோசைகளையும், கரம் அசைத்து இயேசுவைத் துதிப்பதையும் கேட்கமுடிகிறது. இயேசுகிறிஸ்துவை நிராகரித்த அத்தனை ஜனங்களின் பார்வையிலும் அன்று காணப்பட்ட மனதின் ஆழ்ந்த எண்ணங்களை உணர முடிகிறது.ஒரு குழந்தையைப் போல இரட்சிப்பின் அனுபவத்தினால் மாற்றப்பட்ட நம் வாழ்வை எண்ணி தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன்.ஞானஸ்நானத்தின் வழியாக கிறிஸ்துவோடு கூட நாம் அடக்கம் பண்ணப்பட்டோம்.நான் மற்றவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதில் பெருமையடைகிறேன்.முதலைகள் வாழும் ஆப்பிரிக்க நதிகளிலும், புழுக்களால் பாதிக்கப்பட்ட நீர்நிலைகளில்,சுத்தமற்ற களிமண் தண்ணீரிலும்,ஓடிக்கொண்டிருக்கும் ஆறுகளிலும், பாகிஸ்தானின் கால்வாய்களிலும், கனடாவில் உறைந்த ஏரியிலும்,தேவாலய சுவர்களுக்குள்ளே இருக்கும் தொட்டிகளிலும் அநேக தேவபிள்ளைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கின்றார்கள்.



ஆற்றிலே முழுக்கு ஞானஸ்நானம்

ஞானஸ்நானத்தைக் குறித்ததான வேத சத்தியங்களை இந்த இதழில் பகிர்ந்துகொள்ளும்படியாக ஏவப்பட்டேன்.தேவ சத்தியத்திலும், தேவனுடைய ஒளியிலும் நாம் நடப்பதை எண்ணி உள்ளம் மகிழ்கிறேன்.ஞானஸ்நானம் பெறுவது முக்கியமானவை.சிலர் ஞானஸ்நானத்தைக் குறித்த முத்திரை புதிதாய் மனம் மாறியவர்களுக்கு ஞானஸ்நானம் என்பது மறுயோசனை செய்து பின்பு, கொடுக்கப்படவேண்டிய காரியமல்ல.இரட்சிப்பிற்குப் பின் நாம் கீழ்ப்படிந்து செய்யக்கூடிய முதல் செயல்தான் ஞானஸ்நானம். இந்த போதனை தேவபிள்ளைகளுடைய மனதிலே கிரியை செய்யட்டும்.

சகோ.உலிசெஸ் பிலிப்ஸ் என்ற பாடல் எழுத்தாளரின் வரிகள் நினைவுக்கு வருகிறது.

ஒரு உயிர்த்தெழுதல் என்னில் நடந்ததை ஒப்புக் கொள்கிறேன்
இறந்து உயிர்த்து எழும்பியதை உணர்கிறேன்
ஜெயம் தந்த தேவனுக்குத் துதி

ஞானஸ்நானம் என்பதை உறுதியாய் பிரதிபலிக்கும் பாடல் இது. ஞானஸ்நானம் குறித்த அடையாளங்களை உணர்ந்து செயல்படுமாறு ஒவ்வொருவரையும் அன்பாய் கேட்டுக் கொள்கிறோம்.

ஆன்லைனில்

அதிகமாக தெரிந்துகொள்ள

www.thegospeltruth.org



# ஞாபக சின்னம்

பழைய ஏற்பாட்டு காலத்தில் ஜனங்கள் யுத்தத்தின் வெற்றியைக் கொண்டாடவும், தேவனுடைய ஆவியானவர் தரிசனம் தரும்படியாகவும் தேவனுக்கென்று பலிபீடம் கட்டுவார்கள். பலிபீடம் என்பது தேவன் செய்ததை நினைவுபடுத்துகிற ஒரு சின்னம்

ஒவ்வொரு தேவபிள்ளைக்கும் ஞானஸ்நானம் என்பதும் நினைவுபடுத்துகிற ஞாபகஸ்தலமாக இருக்க கடவது. ஆவிக்குரிய வாழ்வில் எப்போதெல்லாம் சாத்தான் சோர்வையும், சோதனையையும், வேதனையையும் கொண்டு வருகிறானோ அப்போதெல்லாம் நாம் தேவனுக்கு கீழ்படிந்து

ஞானஸ்நானத்தின் வழியாக தேவனோடு கூட அடக்கம் பண்ணப்பட்டு மீண்டும் அவரோடு எழும்பியதால் நம்மைநாமே அவரில் அடையாளம் காண முடியும். அந்த ஞாபக சின்னமே நமக்கு வலிமையையும், எதிரியான பிசாசை ஜெயிக்கிற ஜெயத்தையும் தரும்.

# வேதாகம வழிகாட்டி

## பொருள் : முழுக்கு ஞானஸ்நானம்

**வேத வாசிப்பு**

நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து- மத்தேயு 28 : 19

**விளக்கம்**

இயேசுகிறிஸ்துவின் விசுவாசிகள் அனைவரும் தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெறும்படி கட்டளை கொடுக்கப்படுகிறார்கள். இந்த கீழ்ப்படிதல், இயேசுகிறிஸ்துவின் மரணம், உயிர்த்தெழுதல் வழியாக கிடைத்த ஆவிக்குரிய வாழ்வை அடையாளம் காட்டுகிறது. இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தால் முற்றிலுமாய் கழுவப்பட்டதை உணர்த்துகிறது.

**ஞானஸ்நானம்-வரையறை**

கிரேக்க வார்த்தையான பேப்டிசோ என்பதன் அர்த்தம் மூழ்கு, நீரில் அமிழ்த்து, மூழ்குதல், ஸ்நானம் என பொருள்படும்.

**I. தெய்வீக கட்டளை**

- A. மாற்கு 16 : 15-16 விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்
- B. அப்போ 2 : 38 பேதுரு அவர்களை ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும்படி கூறினார்

**II. யோவான்ஸ்நானகன் போதித்தார்/ இயேசுகிறிஸ்து செய்து காட்டினார்**

- A. மாற்கு 1:4-5 யோவான் மனந்திரும்பு தலுக் கேற்ற ஞானஸ்நானத்தைக் குறித்துப் பிரசங்கம் பண்ணிக் கொண்டிருந்தான்
- B. மத் 3 : 16-17 இயேசு யோவான் ஸ்நானகனிடம் ஞானஸ்நானம் பெற்றார்

**III. ஆதி திருச்சபைகளின் பழக்கங்கள்**

- A. அப்போ 2:41 பெந்தெகொஸ்தே நாள்
- B. அப்போ8 : 12 சமாரியர்களின் ஞானஸ்நானம்
- C. அப்போ 8 : 35 - 39 எத்தியோப்பியர்கள்
- D. அப்போ 9 : 17-18 அப்போஸ்தலனாகிய பவுல்
- E. அப்போ 10 : 44-48 கொர்நேலியுவின் வீட்டார்
- F. அப்போ 16 : 14-15 தியத்தீரா ஊரானான லீதியா
- G. அப்போ 16 : 30-33 சிறைக்காவலன்
- H. அப்போ 18 : 8 கொரிந்து பட்டணத்தார்
- I. அப்போ 19 : 1-7 எபேசுவின் சீஷர்கள்

**IV. யாருடைய நாமத்தினாலே ஞானஸ்நானம்**

- A. மத் 28 : 19 பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே
- B. அப்போ 2 : 38 இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே
- C. அப்போ 10 : 48 கர்த்தருடைய நாமத்தினாலே

**V. ஞானஸ்நானம் பெற தகுதிகள்**

- A. அப்போ 2 : 38 மனந்திரும்புதல்
- B. அப்போ 2 : 41 வார்த்தையை ஏற்று கொள்ளுதல்
- C. அப்போ 8 : 37 கர்த்தருடைய நாமத்தினாலே (பார்க்க : மாற்கு 16:16; அப் 8 : 12; 18 :8)

**VI. ஞானஸ்நானத்தின் அடையாளம்**

- A. ரோமர் 6 : 3-4 மரணம், அடக்கம், பண்ணப்படுதல், உயிர்த்தெழுதல்
- B. கொலோ 2 : 12 அவரோடேகூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாகவும் அவரோடேகூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள்

**VII. மூழ்குதல்**

- A. பேப்டிசோ என்பதன் பொருள்
- B. மாற்கு1 : 5 நதியில் ஞானஸ்நானம்
- C. யோவான் 3 :22-23 தண்ணீர் மிகுதியாயிருந்தபடியினால் அங்கே ஞானஸ்நானங்கொடுத்து வந்தான்
- D. அப்போ 8 :38 பிலிப்பும் மந்திரியும் தண்ணீரில் இறங்கினார்கள்

**VII. ஞானஸ்நானத்தின் நோக்கம்**

- A. 1 பேது 3 : 21 நல்மனசாட்சியின் உடன்படிக்கை
- B. அப்போ 2 : 41-42 சபையை அடையாளங்காணுதல்

**முடிவு :**

இரதத்தை நிறுத்தச் சொன்னான். அப்பொழுது பிலிப்பு மந்திரி ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள், பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானங் கொடுத்தான். அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறினபொழுது, கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பைக் கொண்டு போய்விட்டார். மந்திரி அப்புறம் அவனைக் காணாமல் சந்தோஷத்தோடே தன் வழியே போனான் – அப்போ 8 : 38-39.

# முழுக்கு ஞானஸ்நானம்

## ஒருநோக்கு வேதாகம செய்தி

**இயேசுவே நமக்கு முன் உதாரணம்**

யோவான் ஸ்நானகன் இயேசுவுக்கு ஞானஸ்நானங் கொடுத்தார். அவர் ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, இதோ வானம் அவருக்குத் திறக்கப்பட்டது.தேவஆவி புறாவைப் போல இறங்கி தம்மேல் வருகிறதைக் கண்டார். அன்றியும் வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி : இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது (மத்தேயு 3 :15-17) .கடைசியாக இயேசுகிறிஸ்து தம் சீஷர்களுக்கு போதித்து சொன்னது, நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்தஆவியின் சாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து... (மத் 28 : 19-20).

**ஞானஸ்நானம் என்பது ஒரு சடங்கு/சட்டம்**

புதிய ஏற்பாட்டில் ஒருசில சடங்குகளையே காணமுடியும். ஞானஸ்நானம் என்பது இயற்கையான ஒரு அடையாளம். கிறிஸ்து நமக்கு அதை கட்டளையிட்டு தாமும் அதை செய்து காட்டினார்.கிறிஸ்துவின் இறைபணியில் கிறிஸ்தவர்கள் பின்பற்றவேண்டிய மிக முக்கியமான மூன்று காரியங்களில் ஞானஸ்நானமும் ஒன்று.



> விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்
> - மாற்கு 16 : 16

ஞானஸ்நானம் என்பது தெய்வீக அனுபவமான இரட்சிப்புக்கு வழி வகுக்கிறது.விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் (மாற்கு 16 : 16) . மனந்திரும்புகிற ஒவ்வொருவரும் ஞானஸ்நானம் பெற வேண்டும் என விரும்புகிறார்.பெந்தெகொஸ்தே நாளின்போது, ஜனங்கள் பேதுருவிடம் தங்கள் பாவங்களை விட்டு மனந்திரும்பி என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார்கள்.பேதுரு அவர்களை நோக்கி நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்... என்றார் (அப்போ 2 : 37-38).ஞானஸ்நானம் என்பது சாதாரணமாக கொடுக்கப்படுவதல்ல.இது தேவாதி

**வேதாகமத்தில் ஞானஸ்நான உதாரணங்கள்**

விடியற்கால சபையில் ஞானஸ்நானத்தைக் குறித்த போதனையும், அதன் ஒழுங்கும் இருந்தது. அன்றையதினம் ஏறக்குறைய மூவாயிரம்பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டு, ஞானஸ்நானம் பெற்றார்கள் (அப்போ 2 : 41).பிலிப்பு பிரசங்கித்தபோது சமாரிய புருஷரும், ஸ்தீரிகளும் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றார்கள் (அப்போ 8 : 12). பவுல் தமஸ்குவில் எழுந்திருந்து ஞானஸ்நானம் பெற்றான் (அப்போ 9 :17-18). கொர்நெலியுவின் வீட்டார் கர்த்தருடைய நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள் (அப்போ 10 : 44-48). எபேசுவிலும், கொரிந்து பட்டணத்திலும் மனந்திரும்பிய யாவரும் ஞானஸ்நானம் பெற்றார்கள்.பவுலும், சீலாவும் அடைக்கப்பட்டிருந்த சிறைச்சாலையை காவல் காத்துக்கொண்டிருந்த சிறைச்சாலைக்காரன் தன் வாழ்வை கர்த்தருக்கு அர்ப்பணித்து, விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றான் (அப்போ 16 : 30-33). 2017 ஆண்டுகளுக்கு மேலாக கடந்தபிறகு இப்போதும் கூட,உண்மையாக இயேசுகிறிஸ்துவை பின்பற்றுபவர்கள் இந்த ஞானஸ்நான ஒழுங்கை பெறும்படி மூழ்கி எழும்ப வேண்டும்.

**விசுவாசிகள் மாத்திரமே செய்கிற காரியம்**

ஞானஸ்நானம் என்பது குழந்தைகளுக்கோ அல்லது இரட்சிக்கப்படாமல் சபை அங்கத்தினராய் மட்டும் இருப்பவர்களுக்கு அல்ல.வேதம் நமக்கு விசுவாசியின் ஞானஸ்நானத்தையே போதிக்கிறது.ஒருவர் தன் பாவத்தை விட்டு மனந்திரும்பி, இரட்சிக்கப்பட்டு பின்பு ஞானஸ்நானம் பெற வேண்டும்.இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளை விசுவாசித்து, ஏற்றுக்கொண்டவர்கள் எவர்களோ அவர்கள்தான் ஞானஸ்நானம் பெற்றார்கள்.ஞானஸ்நானம் விசுவாசத்தோடு இணைவாக பிணைக்கப்பட்டிருக்கிறது.பிலிப்பு எத்தியோப்பிய மந்திரியிடம் நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லையென்றான். அப்பொழுது அவன் இயேசுகிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன்

என்று சொல்லி ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டான் (அப்போ 8 : 36-37). மனந்திரும்புதலும், இயேசுகிறிஸ்துவின் வல்லமையின் விசுவாசமும் ஒருவர் ஞானஸ்நானம் பெற தகுதியாய் இருப்பது.

ஆகவே ஒருவர் மனந்திரும்பாமலும், விசுவாசிக்காமலும் இருந்துகொண்டு ஞானஸ்நானம் பெறுவதில் பலன் இல்லை. இரட்சிப்பை அடையும் பொருட்டு குழந்தைகளும், அவிசுவாசிகளும் பெறும் ஞானஸ்நானத்தை அதன் உண்மை சத்தியத்தை தாறுமாறாக்குகிறது.

**ஞானஸ்நானம் ஒரு பாவியை இரட்சிக்காது**

முழுக்கு ஞானஸ்நானம் ஒருவரது வாழ்வின் பாவ அழுக்கை கழுவி சுத்தப்படுத்தாது. ஆவிக்குரிய வாழ்வை சீராக்கும். அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும் (1 யோவான் 1 : 7).

இரட்சிக்கப்படாத ஒருவர் ஞானஸ்நானம் பெற்றால் அவர் தண்ணீரில் மூழ்கும்போதும், எழுந்திருக்கும்போதும் பாவமுள்ளவராகவே காணப்படுவார். இருதய சுத்தமாகுதலும் இரட்சிப்பும் தேவனுடைய


ஓடும் நதியில் ஞானஸ்நானம்

விலையேறப் பெற்ற இரத்தத்தினாலே கழுவப்படும் போதுதான் உண்டாகிறது. ஆவிக்குரிய மறுபிறப்பு அடையாவிடில் ஒருவர் 20 முறை ஞானஸ்நானம் பெற்றாலும் பாவமுள்ளவராகவே காணப்படுவார். பாவத்திற்கு சாகாவிடில் ஞானஸ்நானம் மதிப்பற்ற ஒரு சடங்காச்சாரமாகி விடும்.

**இறப்பு மற்றும் உயிர்த்தெழுதலின் அடையாளம்**

ஞானஸ்நானம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இறப்பு மற்றும் உயிர்த்தெழுதலுக்கு அடையாளம். மறுபடி பிறக்கும் ஒரு அனுபவத்தைக் காட்டும் ஒரு நிகழ்வுதான் அது. கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம் (ரோமர் 6 : 3-4). ஒருவர் தண்ணீருக்குள் மூழ்குவது பழைய வாழ்வின் பாவத்தை ஆவிக்குரிய அடக்கம் செய்வதை அடையாளப்படுத்தி காட்டுகிறது. அதேபோல தண்ணீரில் மூழ்கி மீண்டும் மேலே எழும்புவது பாவ வாழ்க்கையிலிருந்து விடுதலை பெற்று கிறிஸ்துவுக்குள் உயிரோடு மீண்டும் எழுப்பப்பட்டதைக் குறிக்கிறது. கழுவப்படுதல் என்பது மாம்சீக சுத்தமல்ல. மாறாக ஆவிக்குரிய சுத்திகரிப்பின் அடையாளம். இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்படுவதைக் குறிக்கிறது. தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியும்போது கிடைக்கும் ஆவிக்குரிய முத்திரை.

**முழுக்கு ஞானஸ்நானம்**

வேதத்தில் ஞானஸ்நானம் என்று சொல்லப்படுகிற வார்த்தை கிரேக்க வார்த்தையான பேப்டிசோ என்பதிலிருந்து வந்தது. இதன் பொருள் மூழ்குதல் அல்லது மூழ்க வைப்பது. ஆகவே இதன் அர்த்தத்திலிருந்து பொருள் விளங்குகிறது. பல சபைகளில் தெளிப்பு ஞானஸ்நானம் பின்பற்றப்படுகிறது. இது இயேசுகிறிஸ்துவின் போதனைக்கு மாறானது. தெளித்தல் அல்லது ஊற்றுதல் என்பது இயேசுகிறிஸ்து போதித்த ஞானஸ்நான அடையாளத்தையே மாற்றுவதாய் அமைகிறது. முழுக்கு ஞானஸ்நானம்தான் கிறிஸ்துவுடன் கூட நாமும் மரித்து மீண்டும் அவரோடு எழுந்திருப்பதால் வரும் பழைய பாவ வாழ்வின் முற்றும் மாறிய நிலைக்கு அடையாளம்.

வேதாகம நாட்களில் முழுக்கு ஞானஸ்நானம் பழக்குவிக்கப்பட்டது. ஏனெனில் யோர்தான் நதியில் யோவான்ஸ்நானகனிடம் இயேசு ஞானஸ்நானம் பெற்றார் (மாற்கு 1 : 5). யோவான் 3 : 22 -23 ல் மிகுதியான தண்ணீர் இருந்த இடத்திலே யோவான்ஸ்நானகன் ஞானஸ்நானம் கொடுத்தார் என்று கூறப்பட்டுள்ளது. ஆகவே தெளிப்பு ஞானஸ்நானம் என்பது எப்படி இதற்கு ஈடாகும். பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள் (அப்போ 8 : 38).

மிக முக்கியமாக இயேசுகிறிஸ்து தாமே நமக்கு முன்உதாரணமாக தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெற்றார் (மத் 3 : 16-17)

**உள்ளார்ந்த அனுபவத்தின் வெளிப்புற சாட்சி**

இயேசுகிறிஸ்து தரும் உள்ளார்ந்த ஆவிக்குரிய அனுபவத்திற்கான வெளிப்புற அடையாளம்தான் ஞானஸ்நானம். அது தேவனைப்பற்றும் நல்மனசாட்சியின் உடன்படிக்கை (1 பேது 3 : 21).

ஞானஸ்நானமானது நல்மனசாட்சியை வழங்கிடாது. மாறாக கிறிஸ்துவுக்கு முன் மாசற்ற கீழ்ப்படிதலின் தன்மையைக் குறிக்கிறது. ஞானஸ்நானத்தின் வழியாக நாம் அவரோடு ஒப்புரவாகும்போது தேவனுடைய குடும்பத்தில் அங்கமாயும், கிறிஸ்துவுக்குள் புதுசிருஷ்டிகளாகவும் எண்ணப்படுகிறோம். ஞானஸ்நானம் விசுவாசத்தின் உறுதியாயும், வெளிப்புற அடையாள அனுபவமாயும், நாம் கிறிஸ்துவுக்குள் புதிதாக்கப்பட்ட வர்களாயும் இருக்கிறோம்.

# கேள்விக்கு என்ன பதில்?

**1) ஞானஸ்நானம் பெறாத மக்கள் பரலோகத்திற்கு செல்ல முடியுமா?**
ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் (யோவான் 3: 3). தேவனுடைய கிருபையினால் மீட்கப்பட்டு, மறுபடியும் பிறக்கும் அனுபவத்தைப் பெற்றவர்களே பரலோக பாக்கியம் பெறமுடியும். கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல (எபேசியர் 2 : 8-9). ஆகவே மாம்சீக ஞானஸ்நானம் என்பது மாத்திரமே ஒருவரை இரட்சிக்காது. ஞானஸ்நானம் பெறாத எத்தனையோ பேர் பரலோகத்தில் உண்டு. ஆனால் அவர்கள் இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்டு, பாவ அறிக்கை செய்து இரட்சிக்கப்பட்டவர்கள்.

சிலுவையில் அறையப்பட்ட கள்ளனே அதற்கு உதாரணம். அவன் இயேசுவை நோக்கி : ஆண்டவரே நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்றான்.இயேசு அவனை நோக்கி இன்றைக்கு நீ என்னுடனே கூட பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் (லூக் 23 : 42-43)

சிலுவையில் அறையப்பட்ட கள்ளர்களில் ஒருவன் மனம் மாறிய அனுபவத்தைப் பெற்றான்.அங்கே ஞானஸ்நானம் பெறும் வாய்ப்பு அவனுக்கு இல்லை.ஆனால் இயேசு அவனை ஏற்றுக்கொண்டு பரதீலிருப்பாய் என வாக்கு பண்ணினார் .சிலருக்கு ஜெபித்து இரட்சிப்பை பெற்றுக்கொள்ள நேரம் கிடைத்திருக்கும். ஆனால் ஞானஸ்நானம் பெற அவர்கள் சூழ்நிலைகளால் கூடாதிருக்கும். அவர்களுக்கு பரதீசில் இளைப்பாற தடையேதுமில்லை.

ஆகவே நமக்கான தருணம் கொடுக்கப்பட்டும், ஞானஸ்நானம் பெறாமல் இருந்தால்,அது கீழ்ப்படியாமை.ஆகவே அது பாவமாக எண்ணப்பட்டு இரட்சிப்பை இழக்க நேரிடும்

2).பல இடங்களில் பேதுரு ஜனங்களிடம் இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெறும்படி ஏன் கூறினார்?இது இயேசுகிறிஸ்து போதித்த திரித்துவ நாமங்களின் பேரில் ஞானஸ்நானம் பெறுவதினின்று வேறுபடுகிறதா?

மத்தேயு 28 : 19 ல் இயேசுகிறிஸ்து பிதா, குமாரன்,பரிசுத்தஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுங்கள் என்றார்.பேதுரு, பெந்தெகொஸ்தே நாளின்போது இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்தார் (அப்போ 2:38).


குட்டையிலே ஞானஸ்நானம்

பேதுரு கொர்நெலியுவின் வீட்டாருக்கு கர்த்தருடைய நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுக்கும்படி கட்டளையிட்டார் (அப்போ 10 : 48). அவர் இயேசுகிறிஸ்துவின் போதனைக்கு மாறாக செயல்படவில்லை. அந்த காலகட்டத்திற்கு ஏற்ப மற்ற மதத்தினரின் ஞானஸ்நானத்திலிருந்து வேறுபட்டு கிறிஸ்தவர்களுக் கென்று அவ்வாறு செய்தார்.

மேலும் இங்கே மிக முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியது யாதெனில் அநேக ஜனங்கள் கர்த்தரை நம்பினார்கள். ஆனால் இயேசுகிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள். தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது (கொலோ 2:9).

ஆகவே இயேசுதான் தேவத்துவத்தின் பரிபூரணம். அவருடைய நாமத்தினாலே பேதுரு ஞானஸ்நானம் கொடுத்தார்.ஆகவே தேவஜனங்கள் வெளிப்படையாக இயேசுவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்வதை வெளிக்காட்டும் பொருட்டே அவ்வாறான ஞானஸ்நானம் கொடுத்தார்.

3).தேவபிள்ளைகளோடு சத்தியத்தின்படி நடந்து ஐக்கியம் கொள்ள விரும்பி,ஒருவர் ஒரு தவறான உபதேசமுள்ள சபையினின்று வெளியே வந்துவிட்டால் அவர்களுக்கு மறுஞானஸ்நானம் தேவைப்படுமா?

வேதத்தில் சொல்லப்பட்டுள்ள ஞானஸ்நானம் என்பது விசுவாசியின் ஞானஸ்நானத்தை சார்ந்ததென்றால், தவறான கொள்கையோடும், உபதேசத்தோடும் நடத்தப்பட்ட ஒரு விசுவாசிக்கு கொடுக்கப்பட்ட ஞானஸ்நானம் வெளித்தோற்றத்திற்காக மட்டுமே. அப்படியானால் அவர்கள் உண்மையாக பாவத்தைவிட்டு விலகி மீட்கப்பட்டு மறு பிறப்படையவே மறு ஞானஸ்நானம் அவசியமாகிறது.

ஆத்தும இரட்சிப்பின் அனுபவம்தான் ஒருவரை தேவசபையிலும், தேவ பிள்ளைகளின் ஐக்கியத்திலும் ஒன்றிணைய வழிவகுக்கிறது. தவறான போதனையுள்ள சபையில் கொடுக்கப்படும் ஞானஸ்நானம் அவர்கள் கீழ்ப்படிந்து இரட்சிக்கப்படும் படியாய் செய்வதால் தேவன் அதை கனம்பண்ணுகிறார். ஆயினும் அவர்கள் அந்த சபையை விட்டு சத்தியத்தை உண்மையாய் போதிக்கும் வேறு சபையில் அங்கத்தினராகும்போது அந்த ஞானஸ்நானம் புதுப்பிக்கப்பட, மறுஞானஸ்நானம் கொடுக்கப்பட வேண்டும். வேதத்தில் குறிப்பாக இதைக்குறித்து சொல்லப்பட வில்லை.எனினும் ஒரு தவறான சபையை விட்டு இன்னொரு சபையில் இணையும்போது பாவத்தினின்று விடுதலையடைந்ததை அறிக்கையிட்டு மறு ஞானஸ்நானம் பெற வேண்டியதும் அவசியமே.பரிசுத்த ஆவியானவர் வழிநடத்தும்படி ஒரு புதிய ஆவிக்குரிய சபையில் இணைகிற ஒருவரின் வாஞ்சையும் அதுவே.

**Printed Matter -Posted Under Rule 114 & 121 P&T Guide**
**Indian Constitution Act 25th & 19(1) Section**

**TAMIL EDITION**

உங்களுக்குத் தெரியுமா?

*யோவான்ஸ்நானகன் மனந்திரும்பி, ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் என்று பிரசங்கித்துக்கொண்டிருந்த நாட்களில் முழுக்கு ஞானஸ்நானம் என்பது யூதஜனங்களுக்கு தெரியாத காரியமல்ல.பழைய ஏற்பாட்டு காலகட்டத்தில் யூதராய் மாறும்படியான ஒரு வழக்கமே ஞானஸ்நானம்.ஒரு மதத்திலிருந்து இன்னொரு மதத்திற்கு மாறும்போது யூதஜனங்களுக்குள்ளே அடையாளம் கண்டுகொள்ளும்படியாக நிகழ்த்தப்பட்ட காரியம்.*

ஏற்ற சமயத்தில் ஒரு வார்த்தை

## அவர்களை எச்சரிப்பாயாக

**மனுபுத்திரனே, உன்னை இஸ்ரவேல் வம்சத்தாருக்குக் காவலாளனாக வைத்தேன்; நீ என் வாயினாலே வார்த்தையைக் கேட்டு, என் நாமத்தினாலே அவர்களை எச்சரிப்பாயாக - எசே 3 : 17**

நீங்கள் உண்மையான தேவஊழியராயிருப்பின், தேவன் அவருடைய ஜனங்களுக்கு உங்களையும் என்னையும் காவலாளனாக வைத்திருப்பதை மறந்து போகாதிருங்கள்.உங்களிடம் அவர் ஒப்படைத்திருக்கிற விலையேறப்பெற்ற ஊழியத்திற்கு நீங்கள் அவருடைய காவலாளர்.கர்த்தருடைய ஊழியம் என்பது சாதாரணமான வேலையல்ல.தேவனுடைய அழைப்பு.மாத்திரமல்ல அவர் உங்களுக்கென்று கொடுத்திருக்கும் பொறுப்பு.தேவனுடைய சத்தத்திற்கு செவிசாய்த்து,அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து தைரியமாய் எச்சரிப்போடு தேவ வார்த்தையை போதிக்கும்போதுதான் தேவன் ஊழியக்காரராகிய உங்களையும் என்னையும் மேன்மைப்படுத்தி கனப்படுத்தி ஊழியத்தின் எல்லைகளை விரிவாக்கி அநேகமாயிரம் ஆத்துமாக்களை தர முடியும்



நம் ஆத்துமாவை கொள்ளையிட்டு செல்லும்படியாய் எதிரியானவன் கிரியை செய்ய தொடங்கும் முன்பே தேவ எச்சரிக்கை நிச்சயமாய் வரும்.அவருடைய எச்சரிப்புக்கு செவிசாய்த்து எதிரியை எதிர்த்து நிற்க பயப்படாதேயுங்கள்.ஜனங்கள் எப்பொழுதும் அவர்களை தேற்றுகிற அல்லது உற்சாகப்படுத்துகிற மாதிரியான வார்த்தைகளைதான் கேட்க வாஞ்சிப்பார்கள்.அவைகள் நமக்கு தேவையானதும், முக்கியமானதும் கூட.ஆனாலும் இவைகளினிமித்தம் தேவ எச்சரிப்பை சொல்ல தயக்கம் வேண்டாம்.சில ஊழியர்கள் இதை சொல்ல தவறுவதால்தான் பல குடும்பங்களும்,ஐக்கியங்களும் சத்தியத்திற்கு இணங்காமல் போகிறார்கள்.நீங்கள் இறைபணி செய்யும் இறைபணியாளர். இயேசுவின் பிரதிநிதி நீங்கள்.மந்தைக்கு மேய்ச்சலைக் காட்டவும், போதிக்கவும்,திகிலடையச் செய்யும் எச்சரிக்கைகளை சொல்லவுமே தெரிந்து கொள்ளப்பட்டீர்கள்.ஜனங்களை நேசியுங்கள்.அவர்களுக்காக தியாக உள்ளத்தோடு செயல்படுங்கள்.பரிசுத்தமான உள்ளத்திற்கு முன்உதாரணமாக திகழுங்கள்.சோதனைகள் மிகவும் அனலாகவும்,கொடூரமாகவும் நெருக்கும்போதும் கூட நீங்கள் தேவனுடைய ஊழியக்காரர் என்பதை மறந்துவிடாதீர்கள்.விசுவாசத்தில் உறுதியாய் தரித்திருந்தால் அவருடைய பெலத்தால் அவர் உங்களை தாங்குவார்

**தொடர்புக்கு:-**
ஆசிரியர்,
காஸ்பல் ட்ருத்
தேவசபை
2/227 – கோலார்பட்டி
பொள்ளாச்சி வட்டம்
தென் இந்தியா - 642 107

The Editor,
Gospel Truth,
Church of God
2/227 - Kolarpatti
Pollachi Taluk
South India - 642 107.

Email :
editor@thegospeltruth.org

**கர்த்தருக்கு பரிசுத்தம்**

Tamil Editor : W.S.Vedha, Church of God, 2/227 Kolarpatti, Pollachi -Taluk,South.India - 642 107.
Phone : 04259 - 280488 Cell: 95975 62641
Publisher : V.Jayanathan Gnanarajan, Mailing : V.Selvam, Despatch : V.J.Sam kirubaharan
Printer : Joy Printers, Pollachi - 642 001. Cell : 96592 54316